சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:68/2020

2022ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சாரதா (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

14.10.2022

1வது எதிர்மனுதாரர் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் என்ற முறையில் சேர்க்கப்பட்டுள்ளார். 2வது எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு நிறுவனம் என்பதால் சேர்க்கப்பட்டுள்ளது. விபத்தில் இறந்தபோன என் அம்மா 1வது எதிர்மனுதாரர் வீட்டில் வேலை பார்த்தார் என்றால் இல்லை பண்ணையில் வேலை பார்த்தார். கார் மோதி விபத்து ஏற்படவில்லை என்றும் காரிலிருந்து பொருட்களை இறக்கும்போது கால் தவறி விழுந்து என் அம்மாவிற்கு காயங்கள் ஏற்பட்டது என்றும் அதற்கு முறையாக சிகிச்சை அளிக்காததால் என் அம்மா இறந்தபோனார் என்றால் சரியல்ல. விபத்து நடந்த 10 நாட்களுக்கு பி றகு தான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். உண்மையில் கார் மோதி விபத்து ஏற்பட்டிருந்தால் அன்றைய தினமே புகார் கொடுக்கப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு நடக்கவில்லை என்பதால் தான் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. காரிலிருந்து தவறி

விழுந்து விபத்து ஏற்பட்டதால் இழப்பீடு எதுவும் தரவேண்டும் எனில் 2 வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.